**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 09.09.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஹிமாச்சல பிரதேசம், மற்றும் பஞ்சாப்பில், மழை-வெள்ளம் மற்றும், நிலச் சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வான் வழியே பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று, குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் பதிவான வாக்குகள், இன்று மாலை எண்ணப் படுகின்றன.

எல்லாத் துறைகளுக்கும் பயனளிக்கும் வகையில் அரசு அறிவித்துள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், வீட்டு வசதி துறையிலும், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

அருணாச்சல் பிரதேஷ் சட்டமன்றத்தின் உறுதிமொழிக் குழுவினர், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் ஆகியோரை சந்தித்து பேசினர்.

---------------------------

மோடி-ஆய்வு (10)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஹிமாச்சல பிரதேசம், மற்றும் பஞ்சாப்பில், மழை-வெள்ளம் மற்றும், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் மூலம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாதிக்கப்பட்ட மக்களையும், மத்திய-மாநில பேரிடர் மீட்புப் படையினரையும் அவர் சந்தித்தார். ஹிமாச்சல் மாநிலம் கங்ரா-வில்,

முதலமைச்சர் திரு. சுக்வீந்தர் சிங், மற்றும், மாநில அரசு அதிகாரிகளுடன் பிரதமர் உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். ஹிமாச்சல பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, அவர் ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி உதவி அறிவித்தார். பஞ்சாப் மாநிலம் குர்தாஸ்பூரிலும், பிரதமர் இன்று மாலை உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்துகிறார்.

*நிலச்சரிவு* (10)

இதற்கிடையே, ஹிமாச்சல் மாநிலம், குளு மாவட்டத்தில் உள்ள ஷர்மஞ்ச் கிராமத்தில் நேற்றிரவு ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, 5 பேர் உயிரிழந்தனர். தேசிய பேரிடர் மீட்புப் படையினர் உடனடியாக பணியில் ஈடுபட்டு, சடலங்களை மீட்டனர். நிலச்சரிவு சம்பவத்தில், 2 வீடுகள் முற்றிலுமாக சேதம் அடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள காலாபன் கிராமத்தில் இன்று, நிலம் திடீரென உள்வாங்கியதில், பல வீடுகள், 2 அரசுப் பள்ளிகள் உட்பட பல்வேறு கட்டிடங்கள் சேதம் அடைந்தன. தொடர் மழை காரணமாக ஏற்பட்ட இந்த சம்பவத்தினால் பீதி அடைந்த மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

---------------------------

*துணை ஜனாதிபதி* 1 (5)

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் வாக்குப்பதிவு, புதுடெல்லியில், புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் இன்று நடைபெற்றது. பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதல் நபர்களில் ஒருவராக, இத்தேர்தலில் வாக்களித்தார். குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் குறித்து

ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

*துணை ஜனாதிபதி* 2 (12)

(வாய்ஸ்)

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில், மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜிதேந்திர சிங், திரு. பிரல்ஹாத் ஜோஷி, மக்களவை தலைவர் திரு. ஓம். பிர்லா, மாநிலங்களவையின் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ், முன்னாள் பிரதமர் திரு. தேவே கௌடா, காங்கிரஸ் எம்.பி. திரு. கவுரவ் கோகோய் உட்பட, நாடாளுமன்ற இரு அவைககளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் வாக்களித்தனர். இத்தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளரும், மஹாராஷ்ட்ரா ஆளுநருமான திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இண்டியா கூட்டணி வேட்பாளரும், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியுமான திரு. சுதர்சன் ரெட்டி ஆகியோர், போட்டிக் களத்தில் இருந்தனர். இன்றைய தேர்தலில் பதிவான வாக்குகள், இன்று மாலையே எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படும்.

---------------------------

*மொரீஷியஸ் பிரதமர்* (12)

மொரீஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலம், 8 நாள் இந்தியப் பயணமாக இன்று, மும்பை வந்துள்ளார். அவர் இப்பயணத்தின் போது, புதுடெல்லியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்திக்க இருக்கிறார். பிரதமர் திரு. நரேந்திர மோடியை அவர் சந்தித்து, இருதரப்பு கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து

விவாதிப்பார். வாரணாசி, அயோத்தி, மற்றும், திருப்பதிக்கும் அவர் செல்ல இருக்கிறார். மும்பையில் வர்த்தக மாநாடு ஒன்றில் அவர் கலந்து கொள்கிறார். இந்தியாவும், மொரீஷியசும், வரலாறு, கலாச்சாரம், மற்றும், மக்கள் நிலையிலான தொடர்புகளை பகிர்ந்து கொள்ளும் நாடுகள் என்றும், அண்டை நாடுகளுக்கு முதலிடம் அளிப்பதான இந்தியாவின் கொள்கையில், மொரீஷியசுக்கு முக்கிய இடம் உண்டு என்றும், வெளியுறவ அமைச்சகம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

---------------------------

நேபாளம் (14)

நேபாளத்தில், சமூக ஊடகங்களுக்கு எதிரான தடையை அரசு விலக்கிக் கொண்ட பின்னரும், டிஜிட்டல் தலைமுறையினர் ஊரடங்கு உத்தரவை மீறி, தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் நிலையில், நேபாள பிரதமர் திரு. கே.பி ஷர்மா ஒலி, பதவியை ராஜினாமா செய்துள்ளார். ஆர்ப்பாட்டங்களின் போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என கோரி, இளைஞர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். போராட்டக்காரர்கள், பாதுகாப்பை மீறி நேபாள நாடாளுமன்ற கட்டிடத்திற்குள் புகுந்து தீ வைத்தனர். நேபாள காங்கிரஸ் அலுவலகம் மற்றும் முக்கிய தலைவர்களின் வீடுகளும் தாக்கப் பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, இந்தியர்கள் நேபாள பயணத்தை ஒத்தி வைக்கவும், ஏற்கனவே நேபாளத்தில் உள்ள இந்தியர்கள், அந்நாட்டு அதிகாரிகளின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, எச்சரிக்கையுடன் நடந்து

கொள்ளவும், அறிவுறுத்தப் படுவதாக, புதுடெல்லியில், வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

----------------------------

*மின்சார வாகனம்* (12)

மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, நாளை புதுடெல்லியில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில், மின்சார வாகனங்களுக்கான அதிநவீன பரிசோதனை கூடத்தை திறந்து வைக்கிறார். மின்சார வாகனங்களுக்கு தேவையான பேட்டரிகளை நம்பகமான முறையில் பரிசோதித்து, அவற்றின் செயல் திறன், மற்றும், பாதுகாப்பு தன்மைக்கு சான்றளிக்கும் மையமாக இப்பரிசோதனைக் கூடம் திகழும் என்றும், குறிப்பாக, கிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த பேட்டரி உற்பத்தியாளர்கள் இதனால் பயன் பெறுவார்கள் என்றும், மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. மின்சார வாகனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலான சூழல் ஒன்றை நாட்டில் உருவாக்குவதில், அரசுக்குள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் இந்த சோதனைக் கூடம் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*ஜிஎஸ்டி* 1 (8)

மக்களுக்கு உகந்த, திறம்பட்ட பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்துவதான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலை நோக்குப் பார்வையை நிறைவேற்றும் வகையில், ஜிஎஸ்டி சபை, கடந்த 3ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில், ஜிஎஸ்டி விகிதங்களை குறைத்து, வரிக் கட்டமைப்பில் பல்வேறு சீர்திருத்தங்களை அறிவித்துள்ளது. எல்லாத்

துறைகளுக்கும் பயனளிக்கக் கூடிய இம்மாற்றங்களால், குறிப்பாக, வீட்டு வசதி உள்ளிட்ட துறைகளிலும், முக்கிய பலன்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

ஜிஎஸ்டி 2 (13)

**(வாய்ஸ்)**

முக்கியமான கட்டுமான பொருட்கள் மீது, ஜிஎஸ்டி குறைக்கப் பட்டுள்ளதால், வீட்டு வசதி, மற்றும், கட்டுமான துறைக்கு, பெரிய அளவில் நிவாரணம் கிடைத்துள்ளது. 28 சதவிகித வரி அடுக்கில் இருந்த சிமெண்ட் தற்போது, 18 சதவிகித வரி அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளது. மணல் – சுண்ணாம்புச் செங்கல், பளிங்குக் கல், மூங்கில் தரை, மற்றும், மூட்டு வேலைக்கான மரத் துண்டுகள் மீதான 12 சதவிகித வரியும், 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதனால் வீடுகள், மற்றும், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான செலவு குறைந்து, மக்கள் சொந்த வீடு கட்டிக் கொள்வது எளிதாகும் என்று, நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை கட்டுமானத் துறையினரும் வரவேற்றுள்ளனர். வரிக்குறைப்பினால், நில வணிகத் துறையில், தேவை அதிகரிக்கும் என்றும், கட்டுமானம் மற்றும் தொடர்புடைய துறைகளில், வேலை வாய்ப்புகள் பெருகும் என்றும், இவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

---------------------------

*புதுச்சேரி உறுதிமொழி* (10)

அருணாச்சல் பிரதேஷ் சட்டமன்றத்தின் உறுதிமொழிக் குழுவினர், அதன் தலைவர் திரு. லைசம் சினாய் தலைமையில், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் ஆகியோரை சந்தித்து பேசினர். பின்னர் சட்டப் பேரவைக் குழு அறையில் நடைபெற்ற, அரசாங்க உறுதிமொழிக் குழுவின் கூட்டத்திலும் இவர்கள் கலந்து கொண்டனர். புதுச்சேரி சட்டப் பேரவையின் நிகழ்வுகள், மற்றும், செயல்பாடுகள் குறித்து இவர்கள் கேட்டறிந்தனர். புதுச்சேரி மாநிலத்தின் சிறப்புகள், மற்றும், அரசின் செயல்பாடுகள் குறித்து, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அருணாச்சல் சட்டமன்றத்தின் உறுதிமொழிக் குழுவினரிடம் எடுத்துக் கூறினார்.

---------------------------

*செல்லான் நாயக்கர்* (8)

புதுச்சேரியில், செவாலியே செல்லான் நாயக்கர் பிறந்தநாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப் பட்டது. குபேர் சாலையில் உள்ள மேரி கட்டட அரங்கில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு.ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சாய் சரவணன் குமார், திரு. லட்சுமிகாந்தன் ஆகியோர், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

---------------------------

வானிலை (11)

வளிமண்டல மேலடுக்கு, மற்றும், கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக, தமிழகத்திலும், புதுசேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 15ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், மற்றும், நீலகிரி, செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, மதுரை மாவட்டம் எழுமலையில், 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------

கிரிக்கெட் (12)

17ஆவது ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடர், அபுதாபியில் இன்று மாலை தொடங்குகிறது. வரும் 28ஆம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டித் தொடரில், ஆப்கானிஸ்தான்-ஹாங்காங் அணிகளுக்கு இடையிலான தொடக்கப் போட்டி, இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும். இந்திய அணி, நாளை தனது முதலாவது போட்டியில், UAE அணிக்கு எதிராக ஆட உள்ளது. இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி, வரும் 14ஆம் தேதி நடைபெறும். ஒருநாள் போட்டிகளாகவும், 20 ஓவர் போட்டிகளாகவும், மாறி மாறி நடத்தப்படும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடர், இம்முறை, 20 ஓவர்

போட்டிகளாக நடத்தப் படுகிறது. ஆரம்பத்தில் இத்தொடர் இந்தியாவில் நடைபெறுவதாக இருந்த போதிலும், பாகிஸ்தான் உடனான, பதற்றமான அரசியல் சூழலை கருத்தில் கொண்டு, ஐக்கிய அரசு அமீரகத்திற்கு மாற்றப்பட்டது.

---------------------------

இஸ்ரோ (18)

விண்வெளித் துறையில் உருவாக்கப்படும் புதிய தொழில்நுட்பங்களை, உள்ளூர் தேவைகளுக்கு மாற்றுவதிலும், விண்வெளித் துறையில் தொழில் முனைவை ஊக்குவித்து, உலகின் முக்கிய விண்வெளி சக்தியாக இந்தியாவை மேம்படுத்துவதிலும், இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் முக்கிய பங்காற்றி வருவதாக, இஸ்ரோ தலைவர் டாக்டர் வி. நாராயணன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது, அனைத்து இந்திய செயற்கைக் கோள்களும் தொடர்ச்சியான முறையில் செயல்பட்டு, பாதுகாப்புப் படைகளின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றியதாக தெரிவித்தார்.

தலைமை ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், உள்நாட்டு அளவிலான பாதுகாப்பு உற்பத்தி, ஏற்றுமதி, மற்றும், புதுமையாக்க முயற்சிகள் மூலம், இந்தியப் பாதுகாப்புப் படைகள், நாட்டின் பாதுகாப்பு, மற்றும், சுயசார்பை மேம்படுத்தி வருவதாக கூறினார். பாதுகாப்புத் துறையில் எதிரிகளின் தொழில்நுட்பத் திறன்கள் மேம்பட்டு வருவதால், அதற்கு ஏற்ப, நாமும்,

நமது தொழில்நுட்பத் திறன்கள வலுப்படுத்திக் கொள்ளுதல் அவசியம் என்று, அவர் வலியுறுத்தினார்.

----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஹிமாச்சல பிரதேசம், மற்றும் பஞ்சாப்பில், மழை-வெள்ளம் மற்றும், நிலச் சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வான் வழியே பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று, குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் பதிவான வாக்குகள், இன்று மாலை எண்ணப் படுகின்றன.

எல்லாத் துறைகளுக்கும் பயனளிக்கும் வகையில் அரசு அறிவித்துள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், வீட்டு வசதி துறையிலும், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

அருணாச்சல் பிரதேஷ் சட்டமன்றத்தின் உறுதிமொழிக் குழுவினர், இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் ஆகியோரை சந்தித்து பேசினர்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**